<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராசிபுரம்</u>

முன்னிலை - திரு. R. விஜயன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு), இராசிபுரம்

2020 ஆம் ஆண்டு மே திங்கள் 26 – ம் நாள் செவ்வாய்கிழமை

**CMP No. 342/2020**

சங்கர் (33/2020) த.பெ. சோலைமுத்து,
7-19A புதுகாலனி,கூட்டாத்துபட்டி,
வாழப்பாடி,சேலம்.

.......மனுதாரார்/எதிரி

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
இராசிபுரம் காவல் நிலையம்
குற்ற எண், 573/2019,
சட்டப்பிரிவுகள் 457, 380 IPC.

.......எதிர்மனுதாரர்/குற்றம் முறையிடுபவர்.

<u>உத்தரவு</u>

1. மனுதாரர்/எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், எதிரி எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது என்றும், எதிரிகள் தலைமறைவாகமாட்டார்கள் என்றும், மேலும் நீதிமன்ற நிபந்தனைகளக்கு கட்டுப்பட எதிரிகள் தயாராக உள்ளார்கள் என்றும் வாதிட்டார்கள் என்றும் வாதிட்டார்.

2. அரசுத் தரப்பில் ஆட்சேபனையில், இந்த வழக்கின் எதிரியானவர் இராசிபுரம் காவல் நிலைய குற்ற எண். 537/2014(CC.No.14/2015), சட்டபிரிவு 392 IPC, 413/2013(CC.No. 194/2015) சட்டபிரிவு 457, 380 IPC ஆகிய இரு வழக்குகளிலும் தங்களது நீதிமன்றத்தில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட காலத்திலிருந்து நீதிமன்றத்தில் ஆஜராகாமல் நீண்ட நாட்களாக தலைமறைவாக இருந்துவந்ததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிரியானவர் தலைமறைவாக இருந்து வந்த காலகட்டத்தில் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும். எதிரியை பிணையில் விட்டால் வழக்கின் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்றும், இவ்வழக்கு

புலன் விசாரணை முடிவடையாமல் உள்ளதால் எதிரியை வெளியே விட்டால் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபட வாய்புள்ளது என்றும், எதிரியை வெளியே விட்டால் அவர் தலைமறைவு ஆகிவிடுவார் என்றும், எதிரிக்கு பிணை கொடுக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

3, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கில் 12.03.2020ம் தேதியன்று எதிரி கைது செய்யப்பட்டு அடைப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கு இராசிபுரம் காவல் துறையினரால் சட்டப்பிரிவுகள் 457, 380 IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் எதிரி பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளதால், மேற்படி எதிரியை பிணையில் விடுவித்தால் அவர் தலைமறைவாக கூடும் என்பதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு இந்த பிணை மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தங்கள் செய்யப்பட்டு இன்று 2020 மே திங்கள் 26ம் தேதி உத்தரவு பகரப்பட்டது.

26/5/20

நீதித்துறை நடுவர்,
இராசிபுரம்.
(முழு கூடுதல் பொறுப்பு).